அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



**அ.எண்** :91/2017
**தேதி** : 14/09/2017

புல்லட் ரயில் திட்டம் - மகிழ்ச்சியும் மாற்றுக்கருத்தும்

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்
நிறுவனத் தலைவர் திரு.ஆர்.சரத்குமார் அறிக்கை.

அகமதாபாத் மும்பை இடையே மிக விரைவு புல்லட் ரயில் திட்டம், ஜப்பான் நாட்டு நிதி உதவியோடு, பாரத பிரதமர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

சுமார் 1.5 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்டுள்ள இத்திட்டம், வளர்ச்சியடைந்த வல்லரசு நாடுகளுக்கு இணையான திட்டம் என்பதிலோ, இந்திய மக்கள் இதற்காக பெருமைப்பட வேண்டும் என்பதிலோ எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை.

நமது நாட்டில் வளர்ந்துவிட்ட நிலைக்கும், வளரவேண்டிய நிலைக்கும் மிகப்பெரும் இடைவெளி நீடித்துவருகிறது. சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகள் முடிந்த நிலையிலும், இன்னும் பல்லாயிரக்கணக்கான கிராமங்களுக்கு சரியான சாலைகள் இல்லை, மின்சார வசதிகள் இல்லை, போக்குவரத்து வசதிகள் இல்லை, குடிநீர் வசதி இல்லை என்ற நிலையில் தான் நாடு உள்ளது. கிராமங்கள் மட்டுமின்றி, நகரங்களிலும், மாநகரங்களிலும் இதுபோன்ற குறைபாடுகள் இல்லாமல் இல்லை.

ரயில்வே துறையை எடுத்துக்கொண்டால், அகலப்பாதை அமைத்தல், புதிய வழித்தடங்கள், மின்மயமாக்கல், விபத்துக்கள் இல்லாப் பயணம், ரயில்நிலைய மேம்பாட்டுப் பணிகள் போன்ற பல்வேறு திட்டங்களும் சேவைகளும் முழுமையாக நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

மேலும், நாடு முழுவதும் நகரங்கள் மற்றும் மாநகரங்களில் போக்குவரத்து நெரிசல் போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண தொலைநோக்குத் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படவில்லை. விவசாயத்திற்கும், குடிநீர்த் தேவைக்கும் அத்தியாவசியமாகக் கருதப்படும் நதிகளின் இணைப்பு அல்லது தேசியமயமாக்குதல் என்று நாங்கள் சொல்லிவருகின்ற கருத்துக்கள் பேச்சளவில் மட்டுமே இருந்து செயல்வடிவம் பெறாமல் உள்ளது.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

கடந்த ஆறு காலாண்டுகளில் இல்லாத அளவு GDP எனப்படும் உள்நாட்டு மொத்த உற்பத்தி மதிப்பு வளர்ச்சி விகிதம் சீராக குறைந்து வந்துள்ளது என்பதை மத்திய அரசின் பொருளாதார அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. கடந்த ஆண்டு மார்ச் மாதம் 9.2 சதவிகிதமாக இருந்த GDP வளர்ச்சி விகிதம் தற்போது 5.7 சதவிகிதமாக குறைந்துள்ளது. GDP-யின் வளர்ச்சி விகிதம் 1 சதவிகிதமாக குறைகிறது என்றால் நாட்டின் வருமானத்தில் 1.5 லட்சம் கோடி ரூபாய் இழப்பு என்பது ஆகும்.

பணமதிப்பீட்டு இழப்பு ஏற்படுத்திய எதிர்மறை விளைவே GDP வளர்ச்சி குறைந்ததற்கு முக்கிய காரணம் என்பதும், நிபுணர்களின் கணிப்பு ஆகும். தற்போது நாடு சந்தித்துவரும் பொருளாதார தொய்வு நிலையில், இந்த புல்லட் ரயில் திட்டம் நமக்கு தொழில்நுட்ப வளர்ச்சியின் ஒரு வியப்பான குறியீடாகத்தான் தெரியும். வெளிநாடுகளில் நம் நாட்டின் மீதான மதிப்பு கூடுவதாகத்தான் அமையும். இருப்பினும், இவ்வளவு பெரிய முதலீட்டில் புல்லட் ரயில் திட்டத்தை விட, நாடு எதிர்நோக்கும் பல்வேறு அடிப்படை வசதிகள், கட்டமைப்பு மேம்பாடுகள் போன்ற அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவேண்டும் என்பதே இன்றைய அவசியத் தேவை.

இன்று தொடங்கப்பட்டிருக்கும் புல்லட் ரயில் திட்டம் ஒரு புறம் மகிழ்ச்சியோடு வரவேற்கத்தக்கது என்றாலும், இத்திட்டத்தை விட அதிமுக்கியத்துவம் வாய்ந்த தேவைகளை நிறைவேற்றி வல்லரசு என்ற நிலைக்கு உயர்ந்து, இத்திட்டத்தை தொடங்கியிருந்தால் இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன் .

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவன தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com